உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன
வித்துவசிகாமணியும்
சீகாழி, கிறிஸ்தவர் கலாசாலைத் தமிழாசிரியரும்
காழிக் கல்விக் கழகப் பேராசிரியரு மாகிய

பறங்கிப்பேட்டை

சிவ ஸ்ரீ ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளையவர்கள்

மீதியற்றப் பெற்ற

முத்துத்தாண்டவர் மும்மணிக்கோவை.

இது

மேற்படியார் குமாரரு ளொருவரான

நாகைப்பட்டினம்
ஆங்கில மருத்துவர்,
திரு. ப. மு. சொக்கலிங்கம் பிள்ளையவர்களால்
ஆக்கப்பெற்று,

சீகாழிக் குமரன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப் பெற்றது.

1943.

பவர்: உ
ா அருணாசலம்
சீர்காழி.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன
வித்துவசிகாமணியும்
சீகாழி, கிறிஸ்தவர் கலாசாலைத் தமிழாசிரியரும்
காழிக் கல்விக் கழகப் பேராசிரியரு மாகிய

பறங்கிப்பேட்டை

சிவ ஸ்ரீ ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளையவர்கள்

மீதியற்றப் பெற்ற

முத்துத்தாண்டவர் மும்மணிக்கோவை.

இது

மேற்படியார் குமாரரு ளொருவரான

நாகைப்பட்டினம்
ஆங்கில மருத்துவர்,

திரு. ப. மு. சொக்கலிங்கம் பிள்ளையவர்களால்
ஆக்கப்பெற்று,

சீகாழிக் குமரன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப் பெற்றது.

1943.



வித்துவ சிகாமணி

சீகாழி ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை.

தோற்றம்:—
விபவ ஐப்பசி,
விசாகம்
28—10—1868.

ஒடுக்கம்:—
சித்திரபானு சித்திரை
பூரட்டாதி
10—5—1942.

சித்திர பானு ஆண்டு சித்திரை அமர பக்கம்
நத்துமே காத சத்தாம் நாளதிற் பூரட் டாதி
முத்துத் தாண்டவ ராயப்பேர் முத்தமிழ்ப் புலவ ராஞேர்
இத்தரை யிகந்தே யீசன் இணையடி நிழலுற் ருரே.

உ

குகமயம்.

ஓம் குமார குருப்யோநம:

மதிப்புரை,

முத்துத் தாண்டவ முன்னவன் பொன்னடி
நத்து செஞ்சொன் னலமுறச் செயுமே.

அன்பிற் சிறந்த அருமைப் பெரியீர்!

இம்மும்மணிக்கோவை நூலாக்கினோர்கள் "மகனுக்குந் தந்தை நலத்தை" யென்றவாறு "தாய் தந்தை துணையடி யருச்சனை செயல்" என்பதைக் கடைப்பிடித்துப் பக்தி சிரத்தையோடு "தந்தையுந் தாயுந் தொழு தெழுக வென்பதே — முந்தையோர் கண்ட முறை" என்றவாறொழுகித் "தந்தைதாய் பணிதற் செய்யுந் தவமலாற் றவம்வே றில்லை மைந்தர்க்கு" என்ற வண்ணம் ஏன்ற வழிபா டியற்றித் "தந்தைசொன் மிக்க மந்திர மில்லை" "தாய்சொற் றுறந்தால் வாசகமில்லை" என்ற முதுமொழிகளுக் கிணங்க நடந்துவரும் என தருமை யாசிரியரவர்களின் தநயர்களே யாவர். "தந்தை மகற்காற்று நன்றி யவையத்து முந்தி யிருப்பச் செயல்" என்னும் முப்பாலுக்கேற்றவாறு [illegible]இருக்கப்பெற்ற இவர்கள் "இவன்றந்தை என்னோற்றான்கொல்என்னுஞ் சொல்" எனுமாறு விளங்குகின்றார்கள்.

தந்தைதாய்பேணுந் தாத்தினர்களாகிய இவர்கள் தமது பிதா மாதாக்களை முன்னறி தெய்வங்களாகவே தொழுது கொண்டாடுகின்றார்கள்.

இப்பெற்றித் திறந்தனைப் பத்திச் சுவை மலிந்துள்ள இந்நூற் பாக்களிற் காணலாம். இப் பிள்ளைகளுண் மூன்ருமவர் சின்னுள் தொட்டே தமிழ் நூல் பயின்றும் முன்னல் வினைகூட்ட அப்பயிற்சித் துறைக்கட் சிறந்து மிளிர்வது போற்றத் தக்கதேயாம். "குலவிச்சை கல்லாமற் பாகம்படும்" "மகனறிவு தந்தையறிவு" என்னும் பொன்மொழி இவர்பால் நன்மொழியேயாயிற்றென்க.

தருமவியாதனைப் போல நடக்கின்றவர்களும், "மன்னவன் பணியன்ருகில் நின்பணிமறுப்பனே" என்பான் போலச் செயலாற்றுபவர்களுமாகிய இக் குமாரர்கள் நால்வரும் தங்கள் பிதா இயற்றி யருளிய வாருணமான்மியத்தில்,

அருந்தவம் புரிந்து பெற்றிங் கமைதர முலைப்பாலூட்டிப்
பெருந்தன மென்னப் பேணிப் பேசரு முத்த மீந்து
கருந்தனத் தொட்டிலேற்றிக் காத்தவள் கற்பு வாய்ந்த
திருந்தன நடையன் னம்மை திருவடி போற்றி போற்றி.

விரைவினிற் புடவி தோன்ற வேள்வியும் பல்கா லாற்றித்
திருகுகொள் நெஞ்சங் கல்வி தேசினுல் விளங்க வைத்துத்
தரையக மதிக்கச் சீர்சாற் றகுதியுந் தந்த தந்தை
புரைதவி ரப்பா சாமிப் புண்ணியன் மலர்த்தாள் போற்றி.

என்று கூறியாங்கு வாழையடி வாழையாக வணங்கப் போந்துளது சாலச் சிறந்ததே யாமென்க. மூவா மருந்தினையொத்தாராகிய மக்கட்கு எவவும் வேண்டுங்கொல்.

இவர்கள் பிதா பூதவுடலுடன் நிலவிய காலத்துமன்றிப் புகழுடலுற்ற ஞான்றும் வழிபடுந்திறந் தலைசிறந்ததேயாம். ஆதலால் இந் நறும்புதல்வர் நால்வரும் புகழுக்கே உரியவராயினர்கள்.

அதனுல், இவர்கள் புகுந்த நெறிக்கண்ணெல்லாம் மேலும் மேலும் பெருகிவளர்ந்து, அரோக திடகாத்திர ஆயுராரோக்கிய முள்ளவர்களாய் நல்லன வாற்றி நலம்பல பெற்றுப் பிதாவைப் போல் பிரகாசித்து விளங்குவார்களாக.

அருளார் பிருகுமுனி யாட்கொண்ட ஞான்று
மருளா விளமை மனத்தாய்—தெருளாருஞ்
சாதுகுண மிக்கமுத்துத் தாண்டவா வாராயும்
போதுன் புலமைமிகப் பொன்.

இங்ஙனம்,
நா. தம்பியப்பன்,
ஆசிரியரடித்துகள்,
ஸ்ரீமுருகானந்த மருத்துவ சாலே.

தில்லையாளி,
25—4—1943.

வாழ்த்து.

இந்நூலாசிரியர் சிறிய தகப்பனுர்
பிறையாறு, ப. அ. கிருஷ்ணஸ்வாமிபிள்ளை அவர்கள்
இயற்றியது.

அருங்குரவ ரைவரின்முன் றெழுங்குரவ
னப்பனென்றே யன்பாற் போற்றி
வருங்குமரன் சொக்கலிங்கன் வையகத்தார்
மனமகிழ்ந்து வாழ்த்துக் கூறப்
பெருந்தவனு முத்துத்தாண் டவர்மேன்மும்
மணிக்கோவை பிறங்கச் செய்தான்
தருங்கொடையாற் புகழாளன் தண்கருணைப்
பெருக்காளன் தழைக மாதோ.

உ

சிறப்புப் பாயிரம்.

சீர்காழி லூத்தரன் மிசியோன் ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியர்
வித்வான், திரு. D. சுந்தரேசஆச்சாரியார் அவர்கள்
இயற்றியது.

தந்தையின் புகழைத் தரணியில் விளக்கல்
தனக்குறு கடனென வறிந்து
முந்துறு காழி முத்துத்தாண் டவநன்
மும்மணிக் கோவையென் றுரைக்குஞ்
சந்தநன் னூலைச் செய்துசாற் றினனால்
தகுபுகழ் நாகைசொக் கலிங்க
மைந்தனுந் தந்தை வழிவரு மகிபன்
வண்டமிழ் நலமுணர்ந் தோனே.

நிலவுமன் பெனும்பொன் னிழைகொடே யகவல்
நேரும்வெண் பாக்கலித் துறையென்
றுலவுமும் மணியுந் தமிழொளி வீசி
யுற்றசொல் லணிபொரு ளணியுங்
குலவுறத் தேர்கை விணைஞன்சொக் கலிங்கக்
குரிசில்செய் மும்மணிக் கோவை
புலவர்த முலகில் படர்ந்துசெந் தமிழ்த்தாய்
பூணுநல் லணியதா கும்மே.

சென்னை, புரசைப்பாக்கம்
சர். M. C. T. முத்தையாசெட்டியார்
உயர்தரக் கலாசாலைத் தலைமைத் தமிழாசிரியர்
வித்வான் உயர்திரு. சோ. அருணாசலதேசிகர் அவர்கள்

இயற்றியது.

பூமகள் வாழும் பொற்பமர் மனைகளும்
காமரு சோலையும் கைதையின் வேலியும்
சூழ்தரு பறங்கிப் பேட்டைவாழ் வேளிர்
குலஞ்செயுந் தவத்தால் நிலந்தனில் உதித்த
பரிதியிற் புகழ்சால் அருங்கலை விநோதனும்
வித்தக முத்துத் தாண்டவ னெனும்பேர்த்
தந்தை மீதுள்ள வன்பினான் மைந்தன்
வைத்திய நூற்கலை மிகத்தெரி அறிஞன்
சொக்கலிங்கம் எனும் பொற்புடைப் பெயரோன்
மிக்கவர் புகழுந் தந்தைதாண் மலரில்
பன்மலர் மாலை புனைதலிற் சீரிது
சொன்மலர் மாலை புனைதலென் றுணர்ந்து
சொற்பொரு ளமைதியும் தொடையுடைச் சிறப்பும்
கற்பவ ருளங்கொளக் கலைவளஞ் சிறக்க
மும்மணிக் கோவை மொழிவளம் படுத்தனன்
எம்மணிக் கோவையும் இதற்கிலை நிகரே.

நாகை நாஷனல் ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியர்
வித்வான், திரு. மு. ஷண்முகதேசிகர் அவர்கள்

இயற்றியது.

காரூரும் பொழிற்சோலைக் கடனாகைக்
காரோணம் கவின வோங்கி
நாரூரும் மனத்தோடு நயமுடனின்
சொற்கூறி நாரின் நோயைப்
பாரூரும் பரமனெனத் தீர்த்தருளுஞ்
சொக்கலிங்கப் பண்பன் காழிச்
சீரூரும் தந்தைமுத்துத் தாண்டவர்மும்
மணிக்கோவை செய்தான் வாழி.

சீகாழி ஸ்ரீசபாநாயகமுதலியார்
இந்து முதனிலை ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்
திரு. க. சுப்பையாபிள்ளை அவர்கள்

இயற்றியது.

தன்னடைந்தார்க் கின்பருளும் பரன்மேவு
காழியில்வாழ் தவமுங் கோடிப்
பொன்னடைந்த வள்ளல்சிதம் பரநாதர்
தோழமையும் பூண்டோன் கல்வி
முன்னடைந்த தந்தைமுத்துத் தாண்டவமும்
மணிக்கோவை மொழிந்துற் றோரை
என்னடைந்தீ ரெனப்பிணிதீர்த் தருள்நாகைச்
சொக்கலிங்க மேத்தி னானல்.

அவையடக்கம்.

அவனிதனிற் பெற்றோ ரருங்குழவிக் கொச்சைக்
குவகை மிகப்பூப்ப ருள்ளங் — தவமுயனுஞ்
சிற்றறிவன் யானுரைத்த சின்மொழியு மேற்குமே
கற்றறிவார் நற்செவியுங் காண்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

முத்துத்தாண்டவர் மும்மணிக்கோவை.

காப்பு,

முத்துக் குமரன்றன் முன்னவனு மானைமுகச்
சித்திவி நாயகன்றன் சேவடியே—முத்திபெறு
மூர்த்திமுத்துத் தாண்டவன்மேல் மும்மணிக்கோ வைசெய்ய
வீர்த்தெம்மை யாட்கொள்ளு மீங்கு.

நூல்.

அகவல்.

முத்தெறி தரங்கந் தத்துவா ரிதிசூழ்
கண்ணகன் ஞாலப் பெண்ணுதற் றிலகமாய்
மிளிருங் கைதை வேலியின் பாங்கர்
வெண்மணற் பரப்பி னண்ணிய புலவு
போக்குவான் புன்னை புதுமல ருகுப்ப
நறுமணங் கொளீஇய நன்னகர் தரங்கை
வதிதன் மேவி வாழ்ந்தஎம் பெரிய!
மன்னு லுத்தரன் மாமிசி யோன்சேர்
தன்னிக ரில்லுயர் தரமிகு பாட
சாலையிற் றமிழ்மொழி தகுபோ தகனுய்
நூல்பல வுணர்த்தி நுண்மதி வாய்ந்த
கர்மா னியர்க்காங் கலையினை விளக்கி
வாத்திமைத் தொழில்பயில் மாணவர் பள்ளியில்
புலமையா சானுய்ப் பொற்பொடு வாழ்ந்து

தண்ணறுந் துளவம் நண்ணிய மார்புறை
திருமக டனக்கென வொருகவி மாலையும்
முருக னிணைத்தாண் முளரி மலர்க்கே
யுருகிய பாவாம் வருகைப் பத்தொடே
யெண்ணில் பனுவ லியற்றியாங் கொரீஇத்
தாமரைத் தடங்க டண்மலர் விளக்கவும்
நடவையின் மலிதரு துடவையி னுப்பட்
காவியு முல்லையுங் கவின்றரு வல்லி
திருவனூர் கண்டு செறிவுற நகைக்கவும்
வளமிகு பொங்க ருளபதி புகலிச்
செய்ந்நிலம் புரந்தே யுய்ந்நெறி காட்டுந்
தொல்குடி வேளிர் தொண்டைமண் டலத்தா
னிருசொல் லுழவன் பெருநிதிக் கிழவன்
கல்வியு ஞானமு மெல்லையிற் பயின்றோன்
காழி நாதனைக் கனவிலு மறவாச்
சிதம்பர நாத னிதம்பெறு மனத்தன்
சிந்தை யுவப்பச் சிறந்தநல் லார்வந்
தலைப்படு மன்பிற் றுன்றிகழ் முத்துத்
தாண்டவ ராய தன்னலங் கருதா
நட்பாங் கிழமை நயந்தமைக்
கொப்பாம் வானிடை யொளிவளர் பிறையே! 1

வெண்பா.

பிறைமதியஞ் சூடுமுடிப் பெம்மான் மிளிரும்
நிறைமதியம் போன்றிலங்கு நீற்றன்—கறைமிடற்றன்
றண்மலரே காழிமுத்துத் தாண்டவன்றா னெஞ்ஞான்றும்
பூண்டருளுந் தன்முடியிற் போது. 2

கட்டளைக் கலித்துறை.

போதுகைக் கொண்டு புனிதமார் பூசை புரியுமன்பர்
பாதுகைப் பூதி பழவினை போக்கும் பலதுறையிற்
காதலுற் றூடு மனதை யடக்கக் கருதுமினென்
றோதுமுத் துத்தாண் டவராய சற்குரு வொண்மணியே. 3

அகவல்.

மணிவட மகலா மாதுமை பங்கன்
பணிபுரி ஞானசம் பந்தநற் றூவன்
பவவினை போக்கச் சிவநெறி காட்டுஞ்
சொற்பா வினத்தைக் கற்பா ராக
யாவரு மறிய மேவுறு கருத்தை
விளக்கிக் காட்டிய வித்தகச் சித்த
தத்துவ நியதித் தளைகளைந் தாங்கே
பத்திசேர் ஞானப் பரவெளி கண்டோய்
தானது வாகச் சார்ந்தநல் லுறவாம்
முத்துத் தாண்டவ வெமக்கே
சுத்தநன் னெறியைத் தோற்றுவித் தருளே. 4

வெண்பா.

அருளே திருமேனி யாக்கொண்ட வம்மான்
பொருளே பொருளாய்ப் புனைந்தான்—தெருளாருங்
காழிமுத்துத் தாண்டவன் கட்டுரைக்குங் கட்டளையா
மாழிமுத்துச் சொல்லே யரண். 5

கட்டளைக் கலித்துறை.

அரணஞ் செயுஞ்சீ ரானடி சேர்த்திடு மச்சுறுத்து
மரணந் தவிர்க்கு மருந்தாகு மாழிசூழ் மாநிலத்திற்
கிரணந் தருஞ்சுடர் போன்றொளி செய்திடுங் கேடொழிக்குஞ்
சரணஞ் செயத்தகுந் தாண்டவ ராயநின் றண்மலரே. 6

அகவல்.

தாண்மலர் போற்றுதுந் தாண்மலர் போற்றுதுந்
தரமார் நின்றிருத் தாண்மலர் போற்றுதும்
வெலற்கரு மாயையின் விறலினை வாட்டிய
பரமா நல்லமன் றிருவடி பருகிக்
கருணை மாரி பெய்தருள் காழி
முத்துத் தாண்டவ! முனிவநம் பரமன்
தித்திக் கும்பதஞ் சேர்வதற் பொருட்டே. 7

வெண்பா.

பொருணன் கவைதாம் புனிதநீ றக்கந்
திருவார் சிவஞ்சீ ரடியார்—தெருளென்றே
நல்லமுத்துத் தாண்டவன் நாடிப் பணித்திட்டான்
வல்லவன் காழியான் வந்து. 8

கட்டளைக் கலித்துறை.

வந்தனை யாள மருமலர்ச் சேவடி மன்னுசிரந்
தந்தனை யாகத் துறுபிணி நீக்கிச் சகசமலப்
பந்தனை போக்கிப் பரசிவ ஞானப் பகலவனைச்
சிந்தனைக் காக்கினை சீர்முத்துத் தாண்டவ சின்மயனே. 9

அகவல்.

சின்மய தேசிக திகழொளி வாசக
செந்தமிழ்ச் செல்வ பந்தமில் புலவ
காழிசம் பந்தன் கருணை நிரம்பிய
காழிசம் பந்த! கருவுயிர் தமக்கா
வைந்தொழி னடாத்த வருண்டம் புரியுந்
தாண்டவப் பெருமான் பெயரிய முத்துத்
தாண்டவ ராய சற்குரு மணியே

யாமொன் றிரந்து பன்னுவங் கேண்மோ
ஞானசம் பந்தமும் மோனவீ டருள்கையு
மிருவகை யியல்புநின் னொருவயி னுளதா
லாசையின் மயங்கி யறிவிலா துழலு
மெம்போ லியர்க்கிங் கிருவினை நீக்கி
ஞானமும் வீடும் நல்கிப்
பிறவா நன்னெறி பெறப்புரி வதுவே. 10

வெண்பா.

அதுவிது வென்று தரற்றி மலையுஞ்
சதுமறைக் கெட்டாச் சபேசன்—முதுநிலையைக்
கண்டமுத்துத் தாண்டவனே காழியனே நந்தமையாட்
கொண்டகுரு தெய்வமெனக் கூறு. 11

கட்டளைக் கலித்துறை.

கூறுந் திருமுக மண்டலங் கண்டோங் குவலயத்து
நீறும் மணிபுனை கோலமுங் கண்டனம் நெற்றிவிழி
மாறும் வடிவி லெமக்கருள் செய்தனை மாப்புகலித்
தேறு மிடமெனத் தேர்முத்துத் தாண்டவ தேசிகனே. 12

அகவல்.

தேசுடைத் திருவடி திகழ்நலம் விளக்க
முதுமறைச் சிலம்பு பதயுகம் புலம்ப
வெழுதரு படிவங் கெழும வுலகெலா
முதரம் பெறுஅத வொருதனித் தாஅயென
விதயங் கனிந்த விமக்கொடி யன்னை
பாஅல்விடை யுயர்த்த மாஅல்விடைப் பாகன்
மனங்களி முகிழ்ப்ப வளங்கதி ரெறிப்பப்
பரிபுர மெல்லொலி பரப்ப விரிமலர்

சரவணம் புக்குத் தழீஇய குழவி
மருமலர்க் குவளைகண் மலர்ந்துமுத் தாடி
யிருமுலைக் குவட்டி னருவியிற் பொழிபால்
வள்ளவாய் வழிய வுள்ளமார்ந் தருத்த
வுண்ட வானவன் றண்டளிர்க் கரத்தால்
வாரின ளணைப்ப வீரிரண் டிரண்டார்ந்
தறுமீன் முலைசுவைத் தறுமா ணுருவம்
பன்னிரு தோளின் மின்னெயி லெறிப்பத்
தழைத்தகுண் டலமு மிழைத்தமா தவத்தின்
பல்கதிர் விரிக்கு மெல்லினர் கோடியர்
மதியெனக் கெடாத துதிகொடு விளங்கிய
மகுடமும் வயங்கு தகுதியின் சட்குண
வள்ளன்மா தேவன் றள்ளறு வலத்த
வெடிக்குர லவுணர் பொடிப்ப முப்புரம்
வளைக்குஞ் சிலைக்குந் துளைக்குங் கணைக்குந்
தொழில்பெறப் படாது விழித்தகண் பொழிய
வெழுஞ்சுடர்வானவர் தொழுந்தொறுந் தொழுந்தொறுங்
களிதுளும் பினராய்க் கண்டுகண் களிப்ப
வளிதுதைந் தூத விளரி யறாத
கமல வாவிசூழ் காழியிற் றிகழ்ந்தோ
னறுபகை கடந்து பெறுமுகத் தவர்கட்
கொருமுகம் பொலிந்த திருமுகத் தொருவனே
பெறலருஞ் செல்வப் பெருக்கா மறம்பொரு
ளின்பவீ டருளு மிளம்பூ ரணனெனக்
குமார மந்திரங் கூறுநற் பெரும !
பிரம புரம்வாழ் பீடுறு புலவ
முத்துத் தாண்டவ முதல்வ !
பத்திகொள் வோமுன் பங்கயப் பதத்தே. 13

வெண்பா.

பதங்காணு‌ன் மால்முடி பங்கயன் காணு‌ன்
விதங்காணு மெய்யுருவை வேண்டி—நிதங்காணு
போற்றியுட் கொள்ளும் புகலிமுத்துத் தாண்டவ
போற்றிநின் பொன்னடிப் பூ. 14

கட்டளைக் கலித்துறை.

பூவா ரடியிணை யெந்தலை சேர்த்த புகலியிஞ
ணுவா னுரைபுரி வல்லமை மிக்கநன் ணுவரசன்
பாவான் மலிகவி நான்குசெய் தம்பிரான் பண்பனவன்
மூவாப் பறங்கித் திருமுத்துத் தாண்டவ முன்னவனே. 15

அகவல்.

முன்மொழி மறைமொழி முறைவழுக் காஅது
புலரி கண்பட லின்றிப் புலமலி
கண்டுபெற் றுடைய கடவுளை யெமக்கே
யெண்டகு முற்றத் தின்னருள் சுரந்திட
விளக்கிய காழி விளங்குநன் முத்துத்
தாண்டவ ராய தத்துவா தீத!
எம்பொருட் டாநீ யியம்பிய
செம்பொருள் யாவுஞ் செவியார்ந் தனவே. 16

வெண்பா.

ஆர்ந்த புலவர்க் கணிமன்று முன்முற்றஞ்
சேர்ந்தவறி ஞர்க்குவான் சேர்தருவாஞ்—சார்ந்த
கலைமுத்துத் தாண்டவநீ காட்டும் கருணைக்
கிலையிந்த வையத் திணை. 17

கட்டளைக் கலித்துறை

இணையார் திருவடித் தாமரை யெம்முளத் தேத்தினமால்
பிணையாம் பெரும்பவப் பேராழிநீந்துமோர் பேறுபெற்றோம்
துணையாம் நறுமுத்துத் தாண்டவ காழிவாழ் சுந்தரயாம்
புணையே யவையெனப் பெற்றனம் பேணிப் புனைந்தனமே.

அகவல்.

புனைந்தது சிரந்தனிற் சிவன்றன பொற்கழல்
வனைந்தது வாயவன் மாண்புறு துதிக
ணினைந்தது நெஞ்சந் தினந்தொறு மவனுரு
நனைந்தநிங் குடல நயனநீர்ப் பெருக்கா
லார்ந்தன செவிக ளவன்மொழி யையவலம்
வந்தன கால்கள் வணங்கின கைக
ளித்திறச் செயறனை யிறைவன்மாட் டொன்றி
நித்தியம் புரியும் நேர்மையைக் கோடலின்
மேவுமா னந்த வெள்ளநன் னெறியி
லெள்ள லிலாத வெழினலஞ் செறிந்த
முத்துத் தாண்டவ தத்துவ ஞானியைக்
காழி வாழுங் கல்விக் கடலை
ஞான அறிவனை மோன நிலையனை
யலைபிடை யலைதரும் பகமே
நாடொறு முன்னிடம் நண்ணநீ நாடே. 19

வெண்பா.

நாட்டுக்கோ நல்லமைச்சா நந்தமக்கோர் நல்லரசாம்
பாட்டுக்கோ வல்லவொரு பாவலனு — மேட்டுக்கே
தானடங்காத் தண்முத்துத் தாண்டவரா யன்றனிச்சீர்
வானடங்க வோங்கி வரும். 20

கட்டளைக் கலித்துறை.

வருஞ்சீ ரடியார் வடிவினைக் காணில் வணங்குமுடி
பெருஞ்சீர் படிதோயும் பின்னு மவர்திறம் பேசிடிலோ
வருஞ்சீர் நயனநீ ராறுய்ப் பெருகி யகநனைக்குந்
தருஞ்சீ ரருளுன்னத் தன்னை மறந்திடுந் தாண்டவனே. 21

அகவல்.

ஏய்ந்தநன் மணியு மெழிலார் பொன்னு
மாய்ந்த கரைதொறு மணியணி யார்க்க
வெற்றுந் திரைக்கட லிருந்தசூற் சங்கு
முற்றுங் கருப்பெற முந்நீர்த் துறந்து
மெள்ளத் தவழ்ந்து மென்கால் வழிச்சென்
றள்ளற் பழனத் தலர்ந்தசெந் தாமரை
வண்ண விதழினுள் வந்தினி தமரும்
பண்ணார் பொருள்பயில் பறங்கிநன் னகர்வரு
முத்துத் தாண்டவ மூதறி வாள!
சத்துவந் தானுய்ச் சமைந்ததோ ருருவ!
தத்துவக் கலைதனைத் தரணியோர்க் குரைத்த
வித்துவ சிகாமணி முக்திக் குரிய
சீரணி தருமையிற் சிவமணம் பரப்பு
மேரணி ஞானசம் பந்தநற் பரமா
சாரிய வரிய சற்குரு வாய
சுப்பிர மணிய சிற்பர ரையும்பின்
செப்பரு சண்முக தேசிகர் தமையு
மருவார் தாமரை மலரடி வணங்கித்
திருவார் நூல்பயில் சிவமாம் பெருந்தேன்
யாவரும் பருக வளித்தனை யிறைத்தே
முந்திய வினையின் முற்றுறு தெனினுஞ்

சிந்திய தேனின் சிறுதுளி யொருகா
லடியனுஞ் சுவைக்க வருளுக
முடிவிலா முதல்வ னடியிணை தொடற்கே. 22

வெண்பா.

தொட்டதெல்லாம் பொன்னாந் துலங்குமுன் சீர்வாயிற்
பட்டதெல்லாம் பாவாம் பனிபோலக் — கெட்டதெல்லாம்
நிற்கண்டா ரின்னல் நிமலமுத்துத் தாண்டவவுன்
சொற்கண்டோ ரற்றேறனு சொல். 23

கட்டளைக் கலித்துறை.

சொல்லுந் தமிழ்முத்துத் தாண்டவ ராயனற் றாமொழியா
னல்லும் பகலு மரன்சே வடியிணைக் கன்புடையான்
கல்லுங் கரையுங் கவிவாணன் கற்பகன் காழியினு
னெல்லும் வகையா லுலகினுக் கேயரு ளுத்தமனே. 24

அகவல்

உத்தம சீல னுருகிய மனத்தன்
முத்துத் தாண்டவ முதல்வன் றிறத்துப்
பத்திசெய் யென்னுடைப் பச்சிளம் பாவை
பித்தினைக் கொண்டாள் பேதையென் சொல்கேன்
முத்தினை மணிதனை முல்லை யரும்பினைப்
பானலைக் காந்தளைப் பண்பார் முருக்கைத்
தேனலை தாமரைத் தெண்ணீ ரறலை
வலம்புரிச் சங்கினை வானொளிர் மின்னினை
நலம்புரி யாவையு நன்கா ராய்ந்தே
காவியப் புலவர் கவினுவ மஞ்சொல
ஓவியப் புலவர் மாவியப் புறவே
யமைத்தென வமைந்த வழகுடை யன்னு

ளிமைத்தெனைப் பாரா ளின்றுயில் கொள்ளா
டம்புனற் சிந்தித் தேம்புவ டெருளா
ளேங்குவ ளந்தோ வென்னினிச் செய்கேன்
றீஞ்சொன் முத்தஞ் சிந்திய வாயைப்
பேரருள் பெருக்கும் பெற்றிய கண்களைத்
தாரணி மார்பைத் தடந்திண் டோளை
வரையா தளித்த வார்ந்த கைகளை
விரையார் கமலம் வென்ற வடிகளை
யென்றினிக் காண்பே னென்றே யயர்வா
டுன்றிய துன்பந் துடைக்க
மன்றுடை யையர் மனம்வைப் பாரோ. 25

வெண்பா.

பாவலர்க்கே யீவாரைப் பன்னுவராம் வள்ளலென்றே
பாவலனு நீயீந்தாற் பன்னுவரென் — நாவலனுந்
தெள்ளுதமிழ்ப் பாவோடு தேங்குபொன்னு மீத்துவந்த
வள்ளல்முத் துத்தாண்ட வா. 26

கட்டளைக் கலித்துறை.

வாவா வெனவே வருந்தி யழைத்தின்ப வாழ்வளித்தாய்
நாவா லிறைவற்கு நாளும் பனுவ னணிபுகன்றாய்
தேவா திகழ்முத்துத் தாண்டவ நின்றன் றிருவடியைப்
பூவா லருச்சனை செய்துமுப் போதினும் போற்றுவமே. 27

அகவல்.

போற்றும் புலவர் புடைசூழ்ந் தமரச்
சாற்றுந் தமிழ்நூல் சாத்திர மனைத்து
மேற்றிய விளக்கி னெழிற்சுடர் போல

வீற்றினி திருந்து விளக்கினை முறையே
அதாஅன்று
வாருண மான்மியம் வழங்கினை வரைந்தே
சாதாக் கியதிருச் சாதாக் கியமுறை
யோதா தவரு முணர வுரைத்தனை
யாங்காங் கிறைவ னருட்டிரு மேனியைப்
பாங்காய்ப் பணிந்தே பனுவ லியற்றினை
விவிலிய நூல்தனை விளக்கமாய்ப் பயில
நவின்றனை தமிழில் நன்கா ராய்ந்தே
எட்டியா புரத்தும றுப்பெய ரேந்த
லாக்கிய சீரு வரியதோர் நூலின்
நடியவ தாரம் புவியினர் புகழவே
காதி ரசனு கவிஞ னுவப்ப
வுரைக டிகை முடனிருந் துரைத்தனை
திருக்குராச் சேரி திருத்தில்லை யாளி
மருவிய கடலூர் மான்மிய மெழுதினை
பறியலூர்ப் புராணம் பண்புடன் பகர்ந்தனை
அதாஅன்று
சங்கம் வளர்த்தனை தமிழ்ச்சுவை யூட்டினை
வங்க மேறியும் வாய்ந்தநின் மாணவ
ரெங்கணுந் தமிழ்மொழி யிசையா நின்றனர்
முத்துத் தாண்டவர் முன்ன ரியற்றிய
பத்திய கீர்த்தனை போற்பல பகர்ந்தனை
யாங்கவன் பெயரே யவனியில் மீண்டு
மோங்கிட வப்பெய ருற்றனை போலுந்
தாண்டவ மாடிடுந் தனிப்பெருங் கடவு
ளாண்டசீ ருளா லவனியிற் பிறந்துநீ
யாற்றிய செயலி னளவினை யடியேம்

சாற்றவுந் தகுமோ சலதியிற் பெரிதே
தூயவெண் ணீறு துலங்கிட வணிந்தே
யேயநற் கலையொளி யெழின்முக மிலங்கச்
சாந்தமுந் தயையுந் தகக்கொண் டமர்ந்து
வந்தடி பணிந்திடும் வரம்பிலா மாணவ
ரவிச்சை நீங்க வருணூற் புகட்டுமுன்
கவின்றிருக் கோலங் கண்டது முதலா
வேதமே வித்தென விரிகலை சாகையாக்
காதங் கவிந்த கல்லா னீழலின்
ஞான சூரிய னலந்தர வுதித்தென
மோன நிலைமை முழுவுருக் கொண்டு
நால்வர்க் கன்று நல்கிய கோலமுந்
திருப்பெருந் துறையது செய்தவப் பயனும்
திருவாத வூரர் செய்தநல் வினையும்
பாண்டியன் பெரும்பொருள் பயன்றரு காலமு
மீண்டவ ணொருங்கே யிசைந்தன வாகக்
குருந்த மரத்தின் குளிர்நிழ லமர்ந்த
திருந்திய செல்வன் திருவுடைக் கோலமு
மொருங்குடன் காட்டு முன்னுருத் தன்னகத்
தகலா திருக்கநின் னடித்துணை
புகலாக் கொண்டே போற்றுமெம் மனமே. 28

வெண்பா.

மனங்கொண்ட வார்வத்தான் மக்களெமை யான்றோ
ரினங்கொண்ட நல்லவையி லேற்றிக்—கனங்கொண்ட
செல்வந் தழைக்கவைத்துச் சீரளித்த தாண்டவற்குச்
செல்வந் துறைபுகலிச் சேர்வு. 29

கட்டளைக் கலித்துறை.

சேர்தற் கரியதாந் தெய்வத் திருவருள் சேர்த்திடுமே
யார்வத் தொடுங்கலை கற்பவர்க் கான்ற வறிவளித்தே
யோர்தற் கரிய சிவவுணர்த் தந்த வுரிமையனம்
பார்வைக் கமைந்தரு ணன்முத்துத் தாண்டவப் பன்னுமுத்தே.

முற்றிற்று.